
# திராவிடத்தால் வாழ்கிறோம்

969

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

82

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## குலையாத கொள்கை உறுதி!




ஓவியம் : சிகரன்

திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றின் பொன்னேடுகளில் பதிந்த மூன்றாவது மாநாடு, 29.01.1950 அன்று கணியூரில் நடைபெற்ற, கோவை மாவட்ட முதல் மாநாடு. திருச்சி, சென்னை என தி.மு. கழகத்தின் முதல் இரண்டு மாவட்ட மாநாடுகளும் நகர்ப்பகுதியில் நடைபெற்றன. ஆனால், மூன்றாவது மாநாடு நகரில் இருந்து வெகு தொலைவில், கிராமப்புறத்தில் நடைபெற்றது. இன்றைய திருப்பூர் மாவட்டத்தின் உடுமலைப்பேட்டைக்கு அருகில் உள்ளது கணியூர். கழகத்தின் தொடக்கக் கால முன்னோடி கே.ஏ.மதியழகனின் சொந்த ஊர்.

மாநாட்டுப் பந்தலுக்கு 3 மைல் தொலைவுக்கு முன்பே, அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. கொடிமரமாக பாக்கு மரத்தை, குருத்தை கொய்யாமல் நிறுத்தியிருந்தனர். பெரிய போக்குவரத்து வசதி இல்லாத ஊர். ரயில் நிலையம்கூட அருகே இல்லை. ஆனாலும், முதல் நாள் இரவில் இருந்தே மக்கள் சாரை சாரையாக மாநாட்டுப் பந்தலுக்கு வரத் தொடங்கினர். சுற்றுப்பகுதியில் இருந்த விவசாயிகள் குடும்பம் குடும்பமாகத் திரண்டனர்.

மறைந்த செயல் வீரர் அர்ச்சுனனுடைய படம், மாநாட்டுப் பந்தலின் முகப்பில் கம்பீரமாக காட்சி தந்தது. மாநாடு தொடங்கும் முன்பாக கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், கே.ஆர்.செல்லமுத்து, ராதாகிருஷ்ணன் ஆகியோர் நிகழ்த்திய, தி.மு.க.வைப் பற்றிய வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. அதன்பிறகு, பேளுக்குறிச்சி சோமசுந்தரம் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். கே.ஏ.முருகேசன் மாநாட்டின் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

தி.மு.கழகத்தின் முன்னணி தலைவர்கள் பலரும் கலந்துகொண்டனர். அப்போது, உடல்நலமின்மை காரணமாக, திருவாரூரில் இருந்த கலைஞர் மட்டும் மாநாட்டில் பங்கேற்கவில்லை. கே.ஆர்.ராமசாமியின் நாடகம் கூடியிருந்த மக்களின் சிந்தனைகளைக் கிளரச் செய்தது. வரவேற்புரையாற்றிய பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, 'தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் தி.மு.கழகம் வேர் விட்டுப் படரும்' என்று பெருமைபடக் கூறினார்.

மாநாட்டுக்குத் தலைமையேற்ற ப.உ.சண்முகம் தனது சிறப்புரையில், அரசியலமைப்புச் சிக்கல் முதல் சர்வதேச பிரச்சினைகள் வரை எடுத்துரைத்தார். மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்னைகளையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைப் பார்வையில், அவர் முன்வைத்த பாங்கு, கூடியிருந்த விவசாயப் பெருங்குடி மக்களைப் பெரிதும் கவர்ந்தது. "அறிவியக்கம் எத்தகைய ஆற்றல் வீரர்களைத் தயாரித்திருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டு, ப.உ.சண்முகத்தின் தலைமையுரை" என 'திராவிட நாடு' ஏடு பாராட்டியது. இறுதியாக, அண்ணா மாநாட்டுப் பேருரையாற்றினார்.

மாநாட்டுப் பந்தலிலேயே அனைவருக்கும் உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எறும்புகளின் ஒழுங்கைப் போல, நீண்ட வரிசையில் சென்று உணவு வாங்கிச் சென்றனர். "வாழ்க' எனப் பேரொலி எழுப்பி, எதற்கு என்றே அறியாமல், கை தட்டல் எழுப்பும் எண்ணத்தினர் அல்ல இங்கு கூடியவர்கள். இருளுக்குள் சித்திரம் தேடும் எஃகு உள்ளமும் வெற்றிச் சிந்தனையும் கொண்டவர்கள் கூடினர்'' எனத் தொண்டர்களின் கொள்கையுறுதியை, 'திராவிட நாடு' இதழில், வார்த்தைகளாக வடித்தார் அண்ணா.

75 ஆண்டுகள் கடந்தும், அதே கொள்கை உறுதியுடன் பயணித்துக் கொண்டிருக்கிறது கழகம். அதே உணர்வுடன் பயணிக்கின்றனர், கழகத் தொண்டர்கள்.

என்றும் குலையாது அந்த உறுதி!

**...கூட்டம் திரளும்**

## வாழவைக்கும் திராவிடம்!

'திராவிடத்தால் வீழ்ந்தோம்' என்று அவதூறு பரப்பியவர்களே வெட்கப்படும் அளவுக்கு, தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் குறிப்பிடத்தக்க அளவில், முன்னேற்றம் கண்டுள்ளது. கண்டு வருகிறது. இந்த விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் பதிவினை, முகநூலில் எழுதியிருக்கிறார் எழுத்தாளர் அழகிய பெரியவன்.

"1994-இல் எழுதப்பட்ட முட்டாள்தனமான, ஆதாரங்கள் ஏதுமற்ற, ஒரு குப்பை நூல், அதில் உமிழப்பட்ட வஞ்சகக் கருத்துகள், தமிழ்நாட்டில் பெரியாருக்கு எதிராக, போலி அறிவு ஜீவிகள் அல்லது சுயநல அறிவுப் பிழைப்புவாதிகள் சிலரையும், தற்குறித் தொண்டர்கள் சிலரையும் சொறிந்து விட்டது. அந்த நூல் எஸ்.குணசீலன் (குணா) எழுதிய 'திராவிடத்தால் வீழ்ந்தோம்' என்ற நூல்.

பார்ப்பனியத்தை நட்பு சக்தியாகவும், பெரியாரை எதிரியாகவும் கட்டமைத்த இந்நூலின் கருத்துகள்தான் இன்றளவும் இந்துத்துவ, சாதிய, போலி தமிழ்த்தேசிய, அடையாள குறுங்குழுவாத நபர்களுக்கு அடிப்படை நூலாக விளங்குகின்றது. இந்த நூலையேகூட படித்திராத சிலர், அதில் உமிழப்பட்டு அவதூறுகளாய் பரப்பப்பட்ட பொய்களை, தற்போது மேலும் மேலும் ஊதிப் பெருக்குகின்றனர்.

இந்துத்துவத்தை எதிர்த்து எழுதுகின்ற நபர்களுக்கு, கோடிக்கணக்கில் பணம் வருகிறது என்று ஜெயமோகன் முன்பு வன்மம் நிறைந்ததொரு பொய்யைச் சொல்லியிருந்தார். ஆனால், உண்மை என்னவென்றால், தமிழ்நாட்டில் திராவிடத்தை எதிர்த்து பேசுகின்றவர்களுக்குத்தான், அப்படிப் பணம் வருகிறது. அவர்கள் சகலவசதிகளுடன், சொகுசாகவும், பாதுகாப்புடனும் வாழவைக்கப் படுகின்றனர்.

ஆனால், முரண் என்னவெனில், பெரியாரிய திராவிடக் கருத்துகளை உள்வாங்கி, திட்டங்கள் ஆக்கி செயல்படுத்திய, செயல்படுத்துகிற தமிழ்நாடுதான் இன்றைக்கு இந்திய ஒன்றிய அளவிலேயே - வீழ்ந்துவிடாமல் - முதன்மையாக எழுந்து நிற்கிறது. இப்போதும் இவர்கள், அதே பொய்யை, சத்தம் போட்டு பேசுகிறார்கள்.

ஓயாமல் ஒன்றைச் சத்தமிட்டு உளறுகிறவர்களை, பைத்தியங்கள் என்று அழைப்பார்கள். ஆனால் சமூக அரசியலிலோ இன்று அவர்களுக்கு வேறு வேறு பெயர்கள்!"என்கிறது அந்தப் பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



### பிறந்த நாளுக்குத் தலைவரிடம் வாழ்த்து!



எஸ்.உசேன்

2018-ஆம் ஆண்டு எனது பிறந்த நாளை முன்னிட்டு, தலைவர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற விரும்பினோம். தலைவரின் இல்லத்திலேயே, என் குடும்பத்தினருடன் பார்க்கும் வாய்ப்பு அமைந்தது. அம்மா அவர்களும் உடனிருந்து வாழ்த்தியது, என்றென்றைக்குமான வாழ்த்து! எல்லா நாட்களுக்குமான மகிழ்ச்சி!

**-எஸ்.உசேன், முன்னாள் இளைஞர் அணித் துணை அமைப்பாளர், ஈரோடு மாநகரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in


# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

82

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## பெரியார் உரையாடல்!




அண்மைக் காலங்களில், தந்தை பெரியார் குறித்த ஆங்கில நூல்கள் குறிப்பிடத்தக்க அளவில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதன்மூலம் பெரியாரிய ஆய்வுகளின் அடர்த்தியும், அவரது சிந்தனைப் பரவலும் அதிகரித்த வண்ணம் உள்ளன. ஆனால், ஒரு காலத்தில் பெரியார் குறித்த அவதூறுகள், ஆங்கிலப் புலத்தில் சில பெரியாரிய எதிர்ப்பாளர்களால் புழங்கவிடப்பட்ட போது அதற்கு காத்திரமாக எதிர்வினையாற்றியவர்களுள் முக்கியமானவர், மார்க்சிய-பெரியாரிய ஆய்வாளர் எஸ்.வி.ராஜதுரை.

திராவிட இயக்க அரசியலால் உந்தப்பட்டு, தொடக்கக் காலத்தில் தி.மு.க. ஆதரவாளராகச் செயல்பட்டு, மொழி உரிமைப் போராட்டத்தில் பங்கேற்று பின்னாட்களில் இடதுசாரி இயக்கங்களில் செயல்பட்டவர் எஸ்.வி.ஆர். இன்றைக்கு வயது முதிர்ந்து, கண் பார்வை மங்கிய பிறகும் தன்னுடைய உழைப்பின் மூலம், பெரியாரிய ஆய்வுக்குப் பெரும் பங்களிப்பை வழங்கி இருக்கிறார். சமூகச் செயற்பாட்டாளர் வித்யா பூஷன் ராவத் அவர்களுடனான உரையாடல் மூலம் ஆக்கம் பெற்ற ஆங்கில நூலான '*Periyar: Caste Nation & Socialism*' 2025 ஆகஸ்ட்டில் வெளியானது.

தமிழ்நாட்டில் இடதுசாரி அரசியல் செயல்பாடுகள், இமானுவேல் சேகரன் படுகொலை, பெரியார்-காமராஜர் இடையிலான உறவு, கீழ்வெண்மணி படுகொலைகள், மீனாட்சிபுரம் பெருந்திரள் மதமாற்றம் எனப் பல பிரச்சினைகள் இந்நூலில் பேசுபொருளாகியுள்ளன.

பெரியார் கொண்டிருந்த ஆங்கிலப் புலமை, திராவிட இயக்கக் கருத்துப் பரவலுக்கு அணையிட அன்றைய அரசு 'சவுத் இந்தியன் புக் டிரஸ்ட்' மூலம் நூல்களை வெளியிட்டது, அண்ணல் அம்பேத்கரின் இந்தியக் குடியரசுக் கட்சி, பெரியாரை அழைத்து நடத்திய கூட்டங்களின் விவரம் எனப் பல்வேறு அரிய தகவல்களை உரிய சான்றுகளுடன் கொண்டிருக்கிறது இந்நூல்.

தமிழ்நாட்டுக்கு வெளியே பெரியார் பற்றிய புரிதலை, செழுமைப் படுத்தவும், அவர் குறித்தான அவதூறுகளை மறுத்தளிக்கவும், சமகால சாதிய சிக்கல்கள் குறித்தும், தரவுகள் அடிப்படையில் தெளிவுகளை வழங்கும் நூலாகவும் இந்நூல் வெளியாகி இருக்கிறது.

பெரியாரிய இயக்கத்துக்கும் அம்பேத்கரிய இயக்கத்துக்கும் இடையில் நிலவிய ஒற்றுமைகளை இந்நூல் மிக ஆழமாகப் பதிவு செய்துள்ளது. பெரியார் வட இந்தியாவுக்குப் பயணித்த போதெல்லாம் அவரை வரவேற்று உபசரித்து, கூட்டங்கள் நடத்தியவர்கள் பெரும்பாலும் அம்பேத்கரியர்களாகவே இருக்கிறார்கள். அதைப் போலவே, தமிழ்நாட்டில் பெரியார் எதிர்ப்பு தலித் ஆய்வாளர்களின் ஓரவஞ்சனை நிரம்பிய கதையாடல்கள் மீது, தர்க்கபூர்வமான கேள்விகளை எழுப்புகிறது இந்நூல்.

திராவிட இயக்கமும் தலித்துகளும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ போராட்டம், இறுதிப் பகுதியில் எஸ்.வி.ஆர். தனது வாழ்வனுபவங்களை மிகவும் வெளிப்படையாகப் பதிவு செய்திருக்கிறார். அரசியல் உணர்வு கொண்ட ஒரு சாமானிய மனிதன், தன் வாழ்வில் சந்திக்கும் இடர்கள் எப்படிப்பட்டவை என்பதையும் கொள்கைகளே வாழ்வென கொண்டு தொடர்ந்து இயங்கி வரும் ஒருவரின் வாழ்க்கைச் சித்திரத்தையும் இதன் மூலம் நாம் உணர முடிகிறது.

உரையாடல் வடிவில், அவதூறுகளை முறியடித்து, பல அரிய தகவல்களைக் கொண்டு வெளியாகியிருக்கும் இந்நூல், அவசியம் வாசிக்கப்படவேண்டிய ஒன்று.

**...வாசிப்போம்.**

## கருவூலம்

### மதுரையில் சட்டப் பிரிவு எரிப்பு!

1963-ஆம் ஆண்டு, டிசம்பர் 16-ஆம் தேதி, இந்தித் திணிப்பு எதிர்ப்பு சட்டநகல் எரிப்புப் போராட்டம், மதுரையில் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் - போலீஸ் அதிகாரிகள் கண்ணெதிரில் மதுரை முத்து தலைமையில், மு.காதர்சா, ஆ.முனியாண்டி, அக்கினிராசன், பி.திருஞானம் ஆகியோர் அரசியல் சட்ட 17 வது பிரிவுக்குத் தீ வைத்துக் கொளுத்தினர். அதன் பின்னர் தீயிட்ட ஐவரும் கைது செய்யப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131